தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### தமிழகத்தில் இன்று சில இடங்களில் மழை பெய்யும்: வானிலை ஆய்வு மையம் தகவல்

வெப்பச்சலனம் காரணமாக தமிழகத்தின் சில இடங்களில் செவ்வாய்க்கிழமை இன்று மழையோ அல்லது இடியுடன் கூடிய மழையோ பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. வங்கக் கடலில் அண்மையில் உருவான காற்றழுத்த தாழ்வு மண்டலம் ஹுூட் ஹுூட் புயலாக வலுவடைந்தது. இதன் தாக்கமாக தமிழகத்தில் லேசான மழை இருந்தது. இந்நிலையில் ஹுூட்ஹுூட் புயலானது விசாகப்பட்டினம், கோபால்பூர் இடையே ஞாயிற்றுக்கிழமை கரையை கடந்தது. இதையடுத்து தமிழகத்தில் வெப்பச்சலனம் காரணமாக அடுத்த சில நாள்களுக்கு மழை பெய்யக் கூடும் என வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையைப் பொருத்தவரை வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். நகரின் அதிகபட்ச வெப்பநிலை 97 டிகிரி பாரன்ஹீட்டாக இருக்கும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

### ஆண்டிபட்டியில் பரவலாக மழை

ஆண்டிபட்டி மற்றும் அதன் சுற்றுப்புற பகுதிகளில் திங்கள்கிழமை மாலையில் மிதமான மழை பெய்தததது. இதனால் விவசாயிகள் மகிழ்ச்சியடைந்துள்ளனர். ஆண்டிபட்டி பகுதியில் கடந்த சில நாள்களாகவே சாரல் மழை பெய்து வந்தது. இந்நிலையில் திங்கள்கிழமை காலை முதல் நல்ல வெயில் அடித்தது. மாலை 5 மணிக்கு மேல் தொடங்கிய மழை சுமார் 1 மணி நேரத்துக்கு மேலாக நீடித்தது, அதன் பின் இடைவெளிவிட்டு மழைபெய்தது. ஆண்டிபட்டி பகுதியில் கடந்த

சில நாள்களாக விவசாயிகள் தங்கள் நிலங்களை உழுது, பயிரிட்டு மழையை எதிர்பார்த்து காத்திருந்தனர். இந்நிலையில் மழைபெய்ததால் மகிழ்ச்சியடைந்துள்ளனர்.

## மேட்டூர் அணைக்குநீர்வரத்து அதிகரிப்பு

மேட்டூர் அணைக்கு நீர்வரத்து திங்கள்கிழமை நொடிக்கு 21,142 கன அடியாக அதிகரித்தது. காவிரியின் நீர்ப்பிடிப்புப் பகுதிகளில் கடந்த சில நாள்களாக மழை பெய்து வருகிறது. இதனால், மேட்டூர் அணைக்கு நீர்வரத்து படிப்படியாக அதிகரித்தது. இந்த நிலையில், அணைக்கு நீர்வரத்து ஞாயிற்றுக்கிழமை 15,881 கன அடியாக இருந்த நிலையில், திங்கள்கிழமை மாலை முதல் நொடிக்கு 21,142 கன அடியாக அதிகரித்தது. அணையின் நீர்மட்டம் 88.71 அடியாக இருந்தது. அணையிலிருந்து காவிரி டெல்டா பாசனத்துக்காக நொடிக்கு 16,487 கன அடி வீதம் தண்ணீர் திறந்துவிடப்படுகிறது. அணையின் நீர் இருப்பு 51.19 டி.எம்.சி.யாக உள்ளது. நீர்வரத்து தொடர்ந்து அதிகரித்து வருவதால், அணையின் நீர்மட்டமும் உயர்ந்து வருகிறது. ஒகேனக்கல்லில்... தருமபுரி மாவட்டம், ஒகேனக்கல் காவிரியாற்றில் ஞாயிற்றுக்கிழமை நொடிக்கு 21 ஆயிரம் கன அடியாக இருந்த நீர்வரத்து, திங்கள்கிழமை 15,700 கன அடியாகக் குறைந்தது.

## குழித்தட்டு தொழில்நுட்பத்தில் நாற்று உற்பத்தி

குழித்தட்டு நாற்றங்கால் தொழில்நுட்பத்தைக் கொண்டு நாற்று உற்பத்தி செய்வது, அதன் மூலம் கிடைக்கும் பயன்கள் குறித்து மோகனூரில் விவசாயிகளுக்கு செயல்விளக்கம் அளிக்கப்பட்டது. மோகனூர் ஒன்றியம், ஆரியூர் ஊராட்சி கொளத்தூரில் செல்லப்பன் என்பவரது தோட்டத்தில் அட்மா திட்ட நிதியுதவியுடன் குழித்தட்டு முறையில் நாற்றங்கால் உற்பத்திக்கான செயல்விளக்கத் திடல் அமைக்கப்பட்டுள்ளது. தோட்டக்கலைத் துறை சார்பில் இந்த

செயல்விளக்கத் திடலுக்குப் பல்வேறு பகுதி விவசாயிகளும் அழைத்துச் செல்லப்பட்டு விளக்கம் அளிக்கப்பட்டது. அப்போது மோகனூர் வட்டார தோட்டக்கலை உதவி இயக்குநர் அசோகன் கூறியது: குழித்தட்டு நாற்றங்கால் தொழில்நுட்பத்தின் மூலம் தரமான உயர்ந்த நாற்றுகள் கிடைப்பதுடன் உற்பத்திச் செலவும் குறைவாகும். இந்த முறையில் வேர் விடுவது எளிதாகவும், விரைவாகவும் இருக்கும். விதைகள் முளைத்து வருவது உறுதி செய்யப்படுவதுடன் நாற்றுகள் அழுகுவதோ, சாய்வதோ இல்லை. அதிகமான விளைச்சலுக்கும் தரமான பயிர் உற்பத்திக்கும் நல்ல நாற்றுகள் அடிப்படை என்பதால் விவசாயிகள் வீரிய ரகங்களின் சாகுபடிக்கு குழித்தட்டு நாற்றங்கால் முறையைப் பயன்படுத்த வேண்டும் என்றார் அவர். ஏற்பாடுகளை வட்டார தோட்டக்கலைத் துறை களப்பணியாளர்கள், அட்மா திட்ட அலுவலர்கள் செய்திருந்தனர்.

## விவசாயிகள் குறைகேட்பு முகாம் அக். 24 -க்கு ஒத்திவைப்பு

புதுக்கோட்டையில் வரும் வெள்ளிக்கிழமை (அக். 17) நடைபெறுவதாக இருந்த மாவட்ட அளவிலான விவசாயிகள் குறைகேட்புக் கூட்டம் அக். 24 -ம் தேதிக்கு ஒத்திவைக்கப் பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு: புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைகேட்கும் முகாம் வருகிற வெள்ளிக்கிழமை (அக். 17) நடைபெறுவதற்கு பதிலாக, வருகிற 24-ம் தேதி காலை 10 மணியளவில் புதுக்கோட்டை மாவட்ட ஆட்சியரகக் கூட்ட அரங்கில், ஆட்சியர் செ. மனோகரன் தலைமையில் நடைபெறவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்றைய வேளாண் செய்திகள்

<u>பட்டுப்புழு இனப்பெருக்க நிலையத்தில் ஆய்வு</u>

குன்னூர் : குன்னூரில் உள்ள பட்டுப்புழு இனப்பெருக்க நிலையத்தை மத்திய பட்டு வாரிய தலைவர் பிஸ்சி கவுடா ஆய்வு செய்தார்.நீலகிரி மாவட்டம் குன்னூரில் உள்ள பட்டுப்புழு இனப்பெருக்க நிலையத்திற்கு மத்திய பட்டு வாரிய தலைவர் பிஸ்சி கவுடா வருகை தந்தார். கடந்த 106 ஆண்டுகளாக செயல்பட்டு வரும் இந்த நிலையத்தை ஆய்வு செய்த அவர், "தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் மதிப்பாய்வுகள்' குறித்து கேட்டறிந்தார்.இதன்பின், 2014ம் ஆண்டில் பட்டுப்புழு வளர்ப்புக்கான விரிவான ஏற்பாடுகள் குறித்து அலுவலர்களுடன் ஆலோசனை நடத்தினார். பின்னர், பண்ணை மற்றும் அருங்காட்சியகத்தை பார்வையிட்ட அவர், "புதிய உற்பத்தி இனங்கள் மற்றும் ஐந்து கலப்பினங்களில் பட்டுப்புழு வளர்ப்பு மேற்கொள்வதை கண்டு, பாராட்டு தெரிவித்தார்தொடர்ந்து, காந்தி படத்திற்கு மரியாதை செலுத்தி, தூய்மை பாரத திட்டத்தை துவக்கிவைத்து பிஸ்சி கவுடா பேசுகையில், ""சுதந்திர போராட்டத்துக்காக கடினமாக போராடி, தங்களது உயிரை பலரும் தியாகம் செய்த பிறகே, ஆங்கிலேயரின் அடிமை பிடியில் இருந்து இந்தியா ஜனநாயக சுதந்திரம் பெற்றது. இதனை பாதுகாப்பதுடன், தற்போது துவக்கப்பட்டுள்ள "தூய்மை பாரத திட்டத்தின் கீழ் ஒவ்வொரு குடிமகனும் பணியாற்ற வேண்டும்," என்றார். தூய்மை திட்ட உறுதிமொழியை விஞ்ஞானிகள் மற்றும் ஊழியர்கள் எடுத்துக்கொண்டனர்.நிலைய விஞ்ஞானி குருராஜ், பட்டுப்புழு வளர்ப்பு

துறையின் வரலாறு மற்றும் செயல்பாடுகள் குறித்து பேசினார். தொடர்ந்து தூய்மை பணிகள் மேற்கொள்ளப் பட்டு, மரக்கன்று நடும் விழாநடத்தப்பட்டது.

**<u>நெல் கொள்முதல் நிலையங்களுக்கு நிரந்தர கட்டடம்! ஒன்பது இடங்களில் அமைகிறது</u>**

காஞ்சிபுரம் : விவசாயிகளிடம் இருந்து கொள்முதல் செய்யப்படும், நெல்லை பாதுகாப்பாக இருப்பு வைக்க, மாவட்டத்தின் ஒன்பது இடங்களில், நிரந்தர கட்டடம் கட்டுவதற்கு, நுகர்பொருள் வாணிப கழகம் முடிவு செய்துள்ளது. அதற்கு இந்த ஆண்டு, நிதி ஒதுக்கீடு செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.காஞ்சிபுரம் மாவட்டத்தில் முக்கிய தொழிலாக விவசாயம் இருந்து வருகிறது. அதிலும் நெல் பிரதான பயிராக பயிரிடப்படுகிறது. அறுவடை செய்த நெல்லை, அரசு நடத்தும் நேரடி நெல் கொள்முதல் நிலையங்களில் விற்று, விவசாயிகள் பலனடைந்து வந்தனர். **493 டன் நெல் கொள்முதல்** : இந்த கொள்முதல் நிலையங்கள் அனைத்தும், தற்காலிகமாக அமைக்கப்பட்டதால், கொள்முதல் செய்யப்படும் நெல்லை இருப்பு வைக்க, கிடங்கு வசதி இல்லாததால், விவசாயிகள் கொண்டு வரும் நெல் மூட்டைகள், திறந்த வெளியில் பாதுகாப்பற்ற நிலையில் வைக்கப்பட்டன. அவை மழையில் நனைந்தும், வெயிலில் காய்ந்தும் வீணாகி விவசாயிகளுக்கு நஷ்டத்தை ஏற்படுத்தின. இதனால் மாவட்டத்தின் பல பகுதிகளில் இயங்கி வந்த நெல் கொள்முதல் நிலையங்கள் காலப்போக்கில் செயல்படாமல் போயின. கடந்த இரண்டு ஆண்டுகளாக போதிய மழை இல்லாததால், மாவட்டத்தில் நெல் உற்பத்தி குறைந்தது. பெரும்பாலான விவசாயிகள், நெல் சாகுபடி செய்வதை கைவிட்டனர். உற்பத்தி குறைவு காரணமாக, கடந்த ஆண்டு, தொன்னாடு, கே.கே.புதுார், புலிப்பரைகோவில் ஆகிய மூன்று இடங்களில் மட்டும், அரசு சார்பில் நேரடியாக நெல் கொள்முதல் செய்யப்பட்டது. மொத்தம், 493 டன் நெல் கொள்முதல்

செய்யப்பட்டது.பெரும்பாலான விவசாயிகள், தனியாரிடம் நெல்லை விற்பனை செய்தனர். தாங்கள் விளைவித்த நெல்லுக்கு, தாங்களே விலை நிர்ணயிக்க முடியாத இழி நிலை விவசாயிகளுக்கு ஏற்பட்டது. தனியார் நிர்ணயிக்கும் குறைந்த விலைக்கு நெல்லை விற்று, பெரும் நஷ்டத்தை விவசாயிகள் சந்தித்தனர். இதன் காரணமாக, பாதுகாப்பான நெல் கொள்முதல் நிலையங்கள் அமைக்கும்படி, விவசாயிகள் பல ஆண்டுகளாக போராடி வந்தனர். இந்த போராட்டத்தின் விளைவாக, இந்த ஆண்டு காஞ்சிபுரம் மாவட்டத்தின் ஒன்பது இடங்களில், நெல் கொள்முதல் நிலையங்களுக்கு புதிய கட்டடம் கட்டுவதற்கு, நுகர்பொருள் வாணிப கழகம் முன்வந்துள்ளது.ஓணம்பாக்கம், தொன்னாடு, குண்ணத் துார், சிலாவட்டம், பூங்குணம், திருமுக்கூடல், தென்னேரி, சாலவாக்கம், ஆத்துார் ஆகிய இடங்களில் நிரந்தர கொள்முதல் நிலையங்கள் கட்டடம் கட்டுவதற்கான இடம் தேர்வு செய்யப்பட்டு, மாவட்ட ஆட்சியருக்கு அனுப்பப்பட்டுள்ளது.**அடுத்த ஆண்டு திறக்க திட்டம்** : நேரடி நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டுவதற்கான நிதி ஒதுக்கியதும், பணிகள் துவக்கப்பட்டு, அடுத்த ஆண்டு புதிய கட்டடம் திறக்கப்படலாம் என, தெரிகிறது.இதுகுறித்து, மாவட்ட நுகர்பொருள் வாணிப கழக அதிகாரி ஒருவர் கூறுகையில், "நடப்பாண்டில் மாவட்டத்தில் ஒன்பது இடங்களில், நெல் கொள்முதல் நிலையங்கள் கட்டடம் கட்ட இடம் தேர்வு செய்யப்பட்டுள்ளது. அதற்கான நிதி ஒதிக்கீடு செய்யப்பட்டதும் பணி துவங்கும். இவை தவிர நெல் அதிகமாக விளையக்கூடிய பகுதிகளில் தற்காலிக நெல் கொள்முதல் நிலையமும் அமைக்கப்படும்," என்றார்.**நெல் விலை நிர்ணயம்** : நடப்பாண்டில் விவசாயிகளிடம் இருந்து வாங்கும் நெல்லுக்கு நுகர்பொருள் வாணிப கழகம் விலை நிர்ணயித்துள்ளது.100 கிலோ கொண்ட சன்ன ரகம் நெல் மூட்டைக்கு 1,470 ரூபாயும், பொது ரகம் மூட்டைக்கு 1,410 ரூபாயும் வழங்கப்பட இருப்பதாக கூறப்படுகிறது. கடந்த ஆண்டு சன்ன ரக 100 கிலோ மூட்டைக்கு 1,415

ரூபாயாகவும் பொது ரகம் ஒரு மூட்டை 1,360 ரூபாயாகவும் வழங்கப்பட்டது.

## <u>மேட்டூர் அணை நீர்வரத்து 21,290 கனஅடியாக அதிகரிப்பு</u>

மேட்டூர்: நீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த பருவமழையால், மேட்டூர் அணை நீர்வரத்து வினாடிக்கு, 21,290 அடியாக அதிகரித்தது. தமிழக-கர்நாடகா எல்லையில் உள்ள காவிரிநீர்பிடிப்பு பகுதியில் தீவிரம் அடைந்த வடகிழக்கு பருவமழையால், நேற்று முன்தினம், 15,881 கனஅடியாக இருந்த மேட்டூர் அணை நீர்வரத்து நேற்று வினாடிக்கு, 21,290 கனஅடியாக அதிகரித்தது. கூடுதல் நீர்வரத்தால் நேற்று முன்தினம், 88.220 அடியாக இருந்த அணை நீர்மட்டம், நேற்று, 88.530 அடியாக அதிகரித்தது. அணையில் இருந்து பாசனத்துக்கு வினாடிக்கு, 16,000 கனஅடி நீர் வெளியேற்றப்படுகிறது.

## <u>நிலக்கடலையில் சிகப்பு கம்பளி புழுத் தாக்கு கட்டுப்படுத்த வேளாண் அதிகாரி ஆலோசனை</u>

ப.வேலூர்: "நிலக்கடலை பயிரில், சிகப்பு கம்பளி புழுக்களை கட்டுப்படுத்த தடுப்பு முறைகளை பின்பற்ற வேண்டும்' என, பரமத்தி வேளாண் உதவி இயக்குனர் குருலிங்கம் தெரிவித்துள்ளார். அவர் வெளியிட்ட அறிக்கை:

பரமத்தி வட்டாரத்தில், நிலக்கடலை பயிர் மானாவாரியாக, 2,700 ஏக்கர் சாகுபடி செய்யப்பட்டுள்ளது. இப்பயிர், மணியனூர், நல்லூர், சித்தம்பூண்டி கோளாரம், ராமதேவம், கோதூர் பகுதிகளில் சாகுபடி செய்யப்பட்டுள்ள நிலக்கடலை பயிரில், சிகப்பு கம்பளி புழுக்கள் தாக்குதல் அறிகுறி தென்படுகிறது. சிகப்பு கம்பளி புழுவை உரிய தருணத்தில் கட்டுப்படுத்த வேண்டும். இல்லை என்றால் இலைகள் முழுமையாக புழுக்களால் தின்று அழிக்கப்பட்டு செடிகளின் தண்டுகள் மட்டுமே மிஞ்சும். அதனால், மகசூல் பெரிதும் பாதிக்கப்படும். புழுக்களை

மாலை நேரத்தில் சொக்கப்பான் கொழுத்தி தாய் அந்துப்பூச்சிகளை கவர்ந்து அழிக்க வேண்டும். நிலக்கடலைப் பயிரில் காணப்படும் முட்டை குவியல்களை பொறுக்கி அழிக்க வேண்டும். சிகப்பு கம்பளிப்புழுக்கள் ஒரு வயலை விட்டு அடுத்த வயலுக்கு செல்லாமல் இருக்க வயலை சுற்றி குழி வெட்ட வேண்டும். சிகப்பு கம்பளி புழுக்களை இளம் பருவத்திலேயே கட்டுப்படுத்த, ஹெக்டருக்கு குவினால் பாஸ், 750 மி.லி., அல்லது குளோரி பைரிபாஸ், 1,250 மி.லி., தெளிக்க வேண்டும். இவ்வாறு செய்தால் நிலக்கடலை பயிரில் உள்ள சிகப்பு கம்பளி புழுக்களை அழித்துவிடலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

## <u>தர்மபுரி மாவட்டத்தில் தொடர் மழை ஈச்சம்பாடி அணை முழு கொள்ளளவை எட்டியது</u>

தர்மபுரி: தர்மபுரி மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து, மழை பெய்து வருகிறது. ஈச்சம்பாடி அணை முழு கொள்ளளவை எட்டியது.

தர்மபுரி மாவட்டம் விவசாயத்தை பிரதானமாக கொண்ட மாவட்டம். மாவட்டத்தில், மொத்தம், 9 அணைகள் உள்ளன. மேலும், பொதுப்பணித் துறை கட்டுப்பாட்டில், 73 ஏரி குளம் மற்றும் பஞ்சாயத்து சார்பாக, 100க்கும் மேற்பட்ட ஏரி, குளம் உள்ளது. மாவட்டத்தில் கடந்த சில ஆண்டுகளாக தென்மேற்கு மற்றும் வடகிழக்கு பருவமழை விவசாயி களை ஏமாற்றி வந்ததால், மாவட்டத்தில் உள்ள அணைகள் மற்றும் ஏரி,குளங்கள் முழு கொள்ளவை எட்டவில்லை. இதனால், மாவட்டத்தில் விவசாயம் பாதிக்கப்பட்டதுடன், பல பகுதிகளில் குடிநீர் தட்டுப்பாடும் ஏற்பட்டு வந்தது. இந்தாண்டும் தென்மேற்கு பருவமழை சராசரியை விட குறைவாக பெய்ததால், விவசாயிகள், கடுமையாக பாதிக்கப்பட்டனர். இந்நிலையில், விவசாயிகளுக்கு ஆறுதல் அளிக்கும் விதமாக, தர்மபுரி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் கடந்த சில நாட்களாக தொடர்ந்து மழை பெய்து வருகிறது. மேலும், மாவட்டத்தின், பல பகுதிகளில் கன மழை பெய்து வருகிறது. இதனால், மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில்

உள்ள அணைகள் மற்றும் ஏரி, குளங்களுக்கு தண்ணீர் வரத்து அதிகரிக்க துவங்கி உள்ளது. குறிப்பாக, ஈச்சம்பாடி அணைக்கட்டு நீர் பிடிப்பு பகுதியில் பெய்த தொடர் மழையின் காரணமாக, இவ்வணை முழு கொள்ளவான, 17.35 அடியை எட்டியுள்ளது. இதனால், அணைக்கட்டி நிரம்பி கடல் போல் காட்சி அளிக்கிறது. வாணியாறு அணையின் மொத்த கொள்ளவான, 65.27 அடியில் தற்போது, 17.71 அடி தண்ணீர் உள்ளது. சின்னாறு அணையின் மொத்த கொள்ளவான, 50 அடியில் தற்போது, 16.76 அடி தண்ணீர் உள்ளது. தொப்பையாறு அணையின் மொத்த கொள்ளவான, 50.18 அடியில் தற்போது, 14.75 அடி தண்ணீர் உள்ளது. நாகவதி அணையின் மொத்த கொள்ளவான, 24.60 அடியில், தற்போது, 3.60 அடி தண்ணீர் உள்ளது. கேசர்குளி அணையின் மொத்த கொள்ளவான, 25.20 அடியில் தற்போது, 12.13 அடி தண்ணீர் உள்ளது. வரட்டாறு வள்ளிமதுரை அணையின் மொத்த கொள்ளவான, 34.45 அடியில் தற்போது, 18 அடி தண்ணீர் உள்ளது. தும்பலஹள்ளி அணையில் கடந்த, 2005ம் ஆண்டு முதல், தண்ணீர் வரத்து இல்லதாதால், இந்தாண்டும், இவ்வணை வறண்டு காணப்படுவது குறிப்பிட தக்கது. இது இவ்வணையை நம்பி பாசனம் பெறும் விவசாயிகளை கவலை அடைய செய்துள்ளது.

## தோகைமலை பகுதியில் சம்பா நடவு பணி தீவிரம்

கரூர்: கரூர் மாவட்டம், தோகை மலை அருகிலுள்ள நெய்தலூர், சேப்ளாப்பட்டி, ஆர்ச்சம் பட்டி, முதலைப்பட்டி, நங்கவரம், நச்சலூர், நெய்தலூர் காலனி, குறிச்சி, சூரியனூர் போன்ற பகுதிகளில் சம்பா சாகுபடிக்கான நடவுப்பணி தொடங்கியுள்ளது. தற்போது, பருவமழை கணிசமான அளவில் பெய்து வருவதால், மேட்டூர் அணையில் இருந்து பாசனத்துக்கு சூழ்நிலைக்கு ஏற்ப, தண்ணீர் திறந்து விடப்படுகிறது. இதையொட்டி, கட்டளைமேட்டு வாய்க்கால் பகுதியில் இருந்து பாசனத்திற்காக நீர் திறந்து விடப்பட்டுள்ளது. கடந்த மாதம்

பயிரிடப்பட்ட நாற்றங்கால், சம்பா பயிர்கள் நடவு பணிகளை விவசாயிகள் தீவிரமாக மேற்கொண்டு வருகின்றனர். இந்தாண்டு ஆந்திரா பொன்னி, கர்நாடகா பொன்னி, பொன் மணி போன்ற நெற்பயிர்களை விவசாயிகள் நடவு செய்கின்றனர். பெரும்பாலும் வரிசை நடவு என்ற ஒற்றை சாகுபடி முறையில் விவசாயிகள் செய்து வருகின்றனர். இதில் அதிக மகசூல் பெறவும், நாற்றங்காலை பாதுகாப்பதில் பிரச்னை இருக்காது என்கின்றனர்.

## மழையால் மானாவாரி பயிர்கள் சாகுபடி துவக்கம்

வத்தலக்குண்டு : வத்தலக்குண்டு பகுதியில் கடந்த 3 ஆண்டுகளாக மழை இல்லை. குடிநீருக்கு திண்டாடிய நிலையில், கால்நடைகளுக்கு தீவனம் இல்லாமல் விவசாயிகள் தவித்தனர். கடந்த மாதம் வத்தலக்குண்டு பகுதியில் மூன்று நாட்கள் தொடர்ந்து மழை பெய்தது. இம்மழையால் பூமி குளிர்ந்து ஈரப்பதம் அதிகரித்ததால் விருவீடு, எழுவணம்பட்டி, விராலிப்பட்டி, கீழக்கோயில்பட்டி கிராமங்களில் மானாவாரி பயிர்களான சோளம், கம்பு, துவரை பயிரிட்டுள்ளனர். இது குறித்து விராலிப்பட்டி விவசாயி ராஜா கூறுகையில்,""மானாவாரி சாகுபடியால் கால்நடைகளுக்கு தீவனம் கிடைக்கும். கடந்த காலத்தைப் போல் பருவமழை ஏமாற்றாமல் இருந்தால் தப்பிக்கலாம்" என்றார்.

## தீபாவளி: ஆடுகள் விலை அதிகரிப்பு

ஆண்டிபட்டி : தீபாவளி நெருங்கும் நிலையில் ஆண்டிபட்டியில் வெள்ளாடுகளுக்கு தேவை அதிகரித்து அதன் விலை உயர்ந்துள்ளது. ஆண்டிபட்டி தாலுகாவில் பல பகுதிகளில் விவசாயிகள் ஆடுகள் வளர்ப்பு தொழில் செய்து வருகின்றனர்.இங்குள்ள கிராமங்களில் வளர்க்கப்படும் ஆடுகள் திங்கட்கிழமை ஆண்டிபட்டியில் நடக்கும் வாரச்சந்தைக்கு கொண்டுவரப்படும்.இயற்கையான மேய்ச்சல் நிலங்களில் வளர்க்கப்படும் வெள்ளாடுகளுக்கு, வெளியூர் வியாபாரிகள் மத்தியில் அதிக மதிப்பு

இருக்கும். தீபாவளி அன்று அசைவ உணவுக்கு முக்கியத்துவம் இருக்கும். ஆட்டு இறைச்சி முக்கிய இடம் பிடிக்கும்.இதனால் தற்போது ஆடுகளுக்கான தேவை அதிகம் இருக்கும். இந்த ஆண்டும் தொடர்ந்த வறட்சியால் ஆடுவளர்ப்பில் விவசாயிகள் அதிக ஆர்வம் காட்டவில்லை. ஆண்டிபட்டியின் பல்வேறு கிராமங்களில் வளர்க்கப்படும் ஆடுகள் அந்தந்த பகுதிகளின் தேவைக்கே சரியாகிறது.இந்நிலையில் வெளியூர் வியாபாரிகளால் ஆடுகளுக்கான தேவை அதிகரித்துள்ளது. கூடுதல் விலை கொடுத்தாவது தரமான ஆடுகளை வாங்க வேண்டும் என்ற நிலை ஏற்பட்டுள்ளது.ஆண்டிபட்டி ஆடு வியாபாரிகள் கூறியதாவது: கடந்த சில ஆண்டுகளில் அசைவ பிரியர்கள் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. ஒவ்வொரு ஆண்டும் விழாக்கால மாதங்களில் ஆடுகளின் தேவை குறித்து விவசாயிகளிடம் முன்கூட்டியே தெரிவித்து, முன்பணம் கொடுக்கும் நிலையும் உள்ளது. சந்தைக்கு வரும் ஆடுகளை வெளியூர் வியாபாரிகள் போட்டி போட்டு வாங்கும் நிலையும் ஏற்படும்.வெளியூர் வியாபாரிகள் அதிகம் வரும்போது உள்ளூரில் தட்டுப்பாடு ஏற்படுவதும் உண்டு. வெளியூர்களில் இருந்து கூடுதல் தேவைக்கு ஆடுகளை கொண்டு வந்தால் செலவு அதிகமாகும். இவ்வாறு கொண்டு வரப்படும் ஆடுகளை தரமில்லை என்று சொல்லி புறக்கணிப்பும் செய்கின்றனர். பண்ணைகளில் வளர்க்கப்படும் ஆடுகளை விட மேய்ச்சல் நிலங்கள் வழியாக சென்று வரும் ஆடுகளுக்கே எப்போதும் கிராக்கி உள்ளது,இவ்வாறு தெரிவித்தனர்.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>பெரியாறு அணையில் துணைக்குழு ஆய்வு</u>**

கூடலூர் : முல்லைப் பெரியாறு அணையின் நீர்மட்டத்தை 142 அடியாக உயர்த்த உச்சநீதிமன்றம் உத்தரவிட்டதையடுத்து, அணையை கண்காணித்து பராமரிக்க மத்திய நீர்வள ஆணைய தலைமை பொறியாளர் என்.ஏ.வி. நாதன் தலைமையில் மூவர் குழு அமைக்கப் பட்டது. தமிழக பிரதிநிதியாக தமிழ்நாடு பொதுப்பணித்துறை செயலாளர் சாய்குமார், கேரள பிரதிநிதியாக அம்மாநில நீர்பாசனத்துறை கூடுதல் செயலாளர் குரியன் உள்ளனர். குழுவிற்கு உதவியாக துணைக்குழு அமைக்கப்பட்டது. இதன் தலைவராக மத்திய நீர்வள ஆணைய செயற்பொறியாளர் அம்பர்ஜி ஹரிஷ் கிரீஷ் நியமிக்கப்பட்டார். இக்குழுவினர் கடந்த மாத தொடக்கத்தில் பெரியாறு அணையில், ஷட்டரை ஏற்றி இறக்கி இயக்கியும், டேட்டா கலெக்ஷன் மானிட்டரில் பதிவுகளையும், கேலரி பகுதியில் அணையின் சீப்பேஜ் வாட்டர் (கசிவு நீர்) குறித்தும் ஆய்வு செய்தனர். நேற்று துணைக்குழு தலைவர் அம்பர்ஜி ஹரிஷ் கிரீஷ் தலைமையில் தமிழக கேரள பிரதிநிதிகள் அடங்கிய துணைக்குழுவினர் பெரியாறு மெயின் அணை, சிற்றணை, மதகுப்பகுதி, கேலரி பகுதிகளில் ஆய்வு செய்தனர். மேலும் 125.10 அடியாக இருந்த பெரியாறு அணையின் சீப்பேஜ் வாட்டர் (கசிவுநீர்) குறித்த அளவுகளையும் ஆய்வு செய்தனர். இதுகுறித்த அறிக்கையை கண்காணிப்பு குழுவிடம் ஒப்படைக்க உள்ளனர்.

## இந்தியாவில் அரிசி உற்பத்தி 10 கோடி டன்னாக குறையும்

புதுடெல்லி: இந்தியாவில் நடப்பு ஆண்டுக்கான அரிசி உற்பத்தி முந்தைய ஆண்டை விட 6% குறைந்து 10 கோடி டன்னாக இருக்கும் என அமெரிக்க வேளாண் துறை கணிப்பு வெளியிட்டுள்ளது. அக்டோபர் நவம்பர் மாதங்களில் மழை அளவு குறைவு, புயல் போன்ற காரணங்களால் காரிப் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. எனவே, நடப்பு ஆண்டில் இந்தியாவின் அரிசி உற்பத்தி நடப்பு ஆண்டில் 10 கோடி டன்னாக இருக்கும். முந்தைய ஆண்டில் இந்தியாவில் அரிசி உற்பத்தி 10.65 கோடி டன்னாக இருந்தது. இத்துடன் ஒப்பிடுகையில் 6% குறைவு. எனவே 20142015ல் காரிப் அறுவடை முந்தைய ஆண்டின் 9.17 கோடி டன்களில் இருந்து 8.7 கோடி டன்னா கவும், ரபி அறுவடை முந்தைய ஆண்டின் 1.49 கோடி டன்களில் இருந்து 1.3 கோடி டன்னாகவும் குறையும் என்று அமெரிக்க வேளாண்துறை கூறியுள்ளது.

## உருளைக்கிழங்கு அறுவடை பணியில் விவசாயிகள் தீவிரம்

ஊட்டி, : நீலகிரியில் தற்போது மழை பெய்து வரும் நிலையில், உருளைக்கிழங்கு அழுகிவிடாமல் இருக்க முன்னதாகவே அறுவடை செய்யும் பணி யில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். நீலகிரி மாவட்டத்தில் தேயிலைக்கு அடுத்தபடியாக மலை காய்கறி விவ சாயம் மேற்கொள்ளப் பட்டு வருகிறது. குறிப்பாக, உருளைக்கிழங்கு அதிகப்படியாக பயிரிடப்பட்டு வருகிறது.தற்போது நீலகிரி மாவட்டத்தில் நாள் தோறும் மழை பெய்து வரு கிறது. இதனால், பெரும்பாலான பகுதிகளில் பரியிடப்பட்டு அறுவடைக்கு தயாராக உள்ள காய்கறி களை சற்று முன்னதாகவே அறுவடை செய்யும் பணி யில் விவசாயிகள் ஈடுபட்டு வருகின்றனர். மழைக் காலங்களில் உருளைக்கிழங்கு

அறுவடை செய்தால், அதனுடன் அதிகளவு மண்ணும் சேர்ந்து வந்து விடும். இதன் காரணமாக, விலை குறையும். எனவே, விவசாயிகள் மழை தீவிரமடைவதற்கு முன் உருளைக்கிழங்கு களை அறுவடை செய்யும் பணிகளில் மாவட்டம் முழுவதுமே ஈடுபட்டுள்ள னர். ஊட்டி அருகேயுள்ள கோடப்பமந்து பகுதியில் பயிரிடப்பட்டுள்ள உருளைக்கிழங்குகளை அறு வடை செய்யும் பணியில் அதிகளவு விவசாயிகள் ஈடுபட்டிருந்தனர்.

**<u>சம்பா நெற்பயிரில் அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது எப்படி விவசாயிகளுக்கு யோசனை</u>**

அரியலூர், : அரியலூர் மாவட்டத்தில் நடப்பு சம்பா நெற்பயிரில் அழுகல் நோய் தாக்குதலை கட்டுப்படுத்துவது குறித்து சோழமோதேவி கிரீடு வேளாண் அறிவியல் மைய தொழில்நுட்ப வல்லுனர் ராஜாஜோஷ்லின் யோசனை தெரிவித்துள்ளார். இதுகுறித்து அவர் வெளியிட்டுள்ள செய்திக்குறிப்பில்,அரியலூர் மாவட்டத்தில் 14 ஆயிரத்து 147 எக்டர் பரப்பளவிள் நெல் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. நடப்பு சம்பா நெல் சாகுபடியின் பருவகாலம் செப்டம்பர் முதல் ஜனவரி வரை. இந்த காலக் கட்டங்களில் அதிக மழையின் காரணமாகவும், வெப்பநிலையின் அளவு 28 முதல் 32 வரை குறைந்து காணப்படுவதாலும், காற்றின் ஈரப்பதம் 85 முதல் 95சதவீதம் வரைக் கூடி இருப்பதாலும் நெற்பயிரில் அதிகளவில் பூச்சிகள் மற்றும் நோய்கள் தாக்குவதற்கு வாய்ப்புள்ளது. மேலும், அதிகளவில் பரவுவதற்கும் சீதோஷ்ண நிலையே காரணமாகும். ஆதலால் நாம் பயிரின் ஆரம்பப் பருவம் முதல் பயிர் பராமரிப்பு முறைகளை பின்பற்றி வந்தோமேயானால் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்பாட்டிற்குள் வைப்பதுடன், நல்ல மகசூலையும் பெறமுடியும்.நெற் பயிரில் அதிகம் நீர் தேங்குவதால், அழுகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளது. இதை கட்டுப்படுத்துவதற்கு நடவு வயலில் வடிகால் வசதிகளை நன்கு அமைத்துக் கொள்ள வேண்டும். சிபாரிசு செய்யப்பட்ட உர அளவிற்கு மேல் பயிருக்கு உரம் அளிக்கக் கூடாது. சம்பா நெல் சாகுபடிக்கு சிபாரிசு செய்யப்பட்ட உர அளவு ஒரு ஏக்கருக்கு 48 கிலோ தழைச்சத்து, 24

கிலோ மணிச்சத்து, 24 கிலோ சாம்பல் சத்து. இது அதிகரித்தால், பூச்சி மற்றும் நோயின் தாக்குதல் மிகுதியாவதற்கு வாய்ப்புள்ளது. இவைகளுடன் உயிர் உரமாக அசோஸ்பைரில்லம் 4 பாக்கெட் (800 கிராம்), பாஸ்போபேக்டீரியா 4 பாக்கெட் இடுவதன் மூலம் 25சதவீதம் வரை ரசாயண உரத்தை குறைக்கலாம் (தழை மற்றும் மணிச்சத்து). மேலுரமாக இடும் உரத்துடன், வேப்பம் புண்ணாக்கு (5 கிலோ உரத்திற்கு 1 கிலோ வேப்பம் புண்ணாக்கு என்ற அளவில்) கலந்து இடுவதால், உரம் சீரான முறையில் பயிருக்கு கிடைப்பதுடன், வீணாகுவதையும் குறைக்கலாம்.மேலும், நட்ட 15ம் நாளிலும், 45ம் நாளிலும், ஒரு உரச்சாக்கில் 8 கிலோ வேப்பம்புண்ணாக்கு எடுத்துக் கொண்டு, வயலிற்கு நீர் செல்லும் முகப்பில் வைத்து நீர் பாய்ச்ச வேண்டும். இதனால் பயிருக்கு பூச்சி மற்றும் நோய் எதிர்ப்புத் திறன் ஏற்படுவதுடன், பயிரும் செழிப்பாக வளரும். ஒரு ஏக்கருக்கு 40 கிலோ மக்கிய கோழி எச்சம் மற்றும் 25 கிலோ வேப்பம்புண்ணாக்கு நன்கு கலந்து, நட்ட 25ம் நாளிலும், 50ம் நாளிலும் நன்கு தூவி விட்டு, பிறகு 3 நாட்கள் கழித்து நீர் விட வேண்டும். இதனால் பூச்சி மற்றும் நோய் தென்பாடு குறைவதுடன் பயிர் செழிப்பாக வளர்ந்து மகசூல் அதிகரிக்க வாய்ப்புள்ளது. நெற்பயிரில் பூச்சி மற்றும் நோய்களைக் கட்டுப்படுத்த, நட்ட 15ம் நாளிலும் மற்றும் 45ம் நாளிலும், ஒரு ஏக்கருக்கு வேப்பங்கொட்டை சாறு கரைசல் மற்றும் சூடோமோனாஸ் 400 கிராம், சோப்புக் கரைசல் / ஒட்டும் திரவம் கலந்து தெளித்து கட்டுப்படுத்தலாம். பாக்டீரிய இலைக் கருகல் நோயைக் கட்டுப்படுத்த பசுஞ்சாண கரைசல் (ஏக்கருக்கு 10 கிலோ பசுஞ்சாணம் 200 லிட்டர் நீரில் கலந்து) தெளித்து கட்டுப்படுத்தலாம். கதிர் நாவாய்ப்பூச்சி மற்றும் இலை உறை அழுகல் நோயைக் கட்டுப்படுத்த பூண்டுச்சாறு 3சதவீதம் தெளித்தும் கட்டுப்படுத்தலாம். மேற்கண்ட முறைகளை விவசாயிகள் பின்பற்றுவதன் மூலம் நல்ல மகசூலை பெற்றும் நச்சுத் தன்மையற்ற தானியத்தை

உற்பத்தி செய்வதோடு மட்டுமில்லாமல் சுற்றுச்சூழலையும் பாதுகாக்கலாம். இதுகுறித்து விவசாயிகள் மேலும் தகவல் பெற சோழமதேவி கிரீடு வேளாண் அறிவியல் மையத்தை தொடர்பு கொள்ளலாம் என தொழில் நுட்ப வல்லுனர் ராஜாஜோஸ்லின் கேட்டுக்கொண்டுள்ளார்.

## <u>விதை நேர்த்தி செய்ய அவசியம் என்ன?</u>

பரமக்குடி, : பயிர்களை பாதுகாக்க விதை நேர்த்தி செய்வதன் அவசியம் குறித்து வேளாண் துறை ஆலோசனை வழங்கி உள்ளது.குழந்தைகளுக்கு பிற்காலத்தில் வரக்கூடிய கக்குவான், போலியோ போன்ற நோய்கள் வராமல் தடுக்க தடுப்பூசி, சொட்டு மருந்து கொடுப்பதை போலவே, பயிர்களை விதை மூலம் பரவக்கூடிய பூஞ்சான் நோய்களிலிருந்து பாதுகாக்க விதையுடன் பூஞ்சான மருந்து கலந்து விதை நேர்த்தி செய்ய வேண்டும்.விதை மூலம் பரவும் இலைப்புள்ளி, இலைக்கருகல், இலை உறை அழுகல் மற்றும் குலை நோய் போன்ற பூஞ்சான நோய்களை தடுக்க 1 கிலோ விதைக்கு 2 கிராம் வீதம் கார்பன்டைசிம் கலந்து 24 மணிநேரம் வைத்திருந்து பின் விதைக்க வேண்டும்.இல்லாவிட்டால் 1 கிலோ விதைக்கு 4 கிராம் வீதம் டிரைக்கோ டெர்மாவிருடி அல்லது 1 கிலோ விதைக்கு 10 கிராம் வீதம் சூடோமோனாஸ் ப்ளாரசன்ஸ் என்ற உயிரியல் பூஞ்சான மருந்தை விதைப்பதற்கு முன், கலந்து விதைக்க வேண்டும். ஒரு ஏக்கருக்கு தேவையான விதைக்கு, விதை நேர்த்தி செய்ய 10 ரூபாய் முதல் 20 ரூபாய் வரை செலவாகும். விதை நேர்த்தி செய்வதால், பயிர் வளர்ச்சி காலத்தில் நோய்கள் தாக்கி, அவற்றை கட்டுப்படுத்த மருந்திற்கு செலவு செய்ய வேண்டிய அவசியம் ஏற்படாது. நெல், சிறுதானியங்கள், பருத்தி, கரும்பு, எள் மற்றும் சூரியகாந்திக்கு விதைநேர்த்தி செய்ய 1 ஏக்கர் விதைக்கு அசோஸ்பைரில்லம் 1 பாக்கெட் ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின்பு விதைக்க

வேண்டும்.நிலக்கடலை மற்றும் பயிறு வகைகளுக்கு விதை நேர்த்தி செய்ய 1 ஏக்கர் விதைக்கு ரைசோபியம்கல்ச்சர் 1 பாக்கெட்டை ஆறிய வடிகஞ்சியில் கலந்து அதனுடன் பூஞ்சான விதை நேர்த்தி செய்த விதையை கலந்து நிழலில் 30 நிமிடம் உலர்த்தி பின் விதைக்க வேண்டும். உயிர் உர விதை நேர்த்தி செய்வதால், உயிர் உரங்கள் காற்றிலுள்ள தழைச்சத்தை கிரகித்து பயிருக்கு கொடுக்கும். அதனால் இளம் பயிரின் இலைகள் கரும்பச்சை நிறத்துடன் செழிப்பாக வளரும். பயிர்கள் வறட்சியை தாங்கி வளர்ந்து, கூடுதல் மகசூல் கொடுக்கும். இதனால் கால் பங்கு தழைச்சத்து இடுவதை குறைக்கலாம். உர செலவை குறைக்கலாம். எனவே விவசாயிகள் விதை நேர்த்தி செய்து பயிர்களை நோய்களிலிருந்து வருமுன் காக்க வேண்டுமென பரமக்குடி வேளாண் உதவி இயக்குநர் கண்ணையா ஆலோசனை வழங்கி உள்ளார்.

## <u>கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் துவரை சாகுபடி ஆய்வு</u>

கிருஷ்ணராயபுரம், : கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் நடவு செய்யப்பட்ட துவரை காடுகளை தேசிய உணவு பாதுகாப்பு இயக்க தேசிய ஆலோசகர் ஆய்வு செய்தார்.கரூர் மாவட்டத்தில் கிருஷ்ணராயபுரம் வட்டாரத்தில் அதிகப்படியாக துவரை சாகுபடி செய்யப்பட்டுள்ளது. நடப்பாண்டில் 1,600 எக்டேர் அளவில் துவரை சாகுபடி நடந்து வருகிறது. துவரை சாகுபடி செய்யும் விவசாயிகளுக்கு தேசிய உணவு பாதுகாப்பு இயக்கம் எக்டேருக்கு ரூ.7,500 மானியம் வழங்கி ஊக்கப்படுத்தி வருகிறது. கிருஷ்ணராயபுரம் வட்டாரத்திற்குட்பட்ட சங்கரமலைப்பட்டியில் விவசாயி ராமசாமி தோட்டத்தில் சாகுபடி செய்யப்பட்டுள்ள துவரை செடிகளை புதுடெல்லி தேசிய உணவு பாதுகாப்பு இயக்க ஆலோசகர் திரிவேதி நேரில் ஆய்வு மேற்கொண்டார். துவரை சாகுபடி செய்தால் எக்டேருக்கு எவ்வளவு மகசூல் கிடைக்கும். துவரையில் நோய் தாக்குதல் பரவாமல் இருக்க என்னென்ன வழிமுறைகள் பின்பற்றப்படுகிறது என்பது குறித்து விவசாயிகள் மற்றும் அதிகாரிகளிடம் கேட்டறிந்தார். அப்போது மாநில

ஆலோசகர் கோவிந்தன், மாவட்ட வேளாண் இணை இயக்குனர் தெய்வேந்திரன், துணை இயக்குனர் சந்திரசேகர், கிருஷ்ணராயபுரம் வட்டார வேளாண் உதவி இயக்குனர் சேகர், வேளாண் அலுவலர்கள் காதர், ராஜூ, துணை வேளாண் அலுவலர் குணசேகர், உதவி வேளாண் அலுவலர்கள் விஜயகுமார், புவனேஸ்வரன், சக்திவேல், சிவக்குமார் ஆகியோர் உடனிருந்தனர்.

## 17ம்தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்

கரூர், : கரூர் கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் வரும் 17ம்தேதி விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் நடைபெறுகிறது. கரூர் மாவட்டத்தில் அக்டோபர் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் வரும் 17ம்தேதி (வெள்ளி) காலை 11 மணிக்கு கலெக்டர் அலுவலக கூட்ட மன்றத்தில் நடைபெறுகிறது. கரூர் மாவட்ட விவசாயிகள், விவசாய சங்க உறுப்பினர்கள் அனைவரும் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொள்ள வேண்டும். கூட்டத்தில் விவசாயம் மற்றும் விவசாயம் சார்ந்த மனுக்கள் மட்டும் விவாதத்திற்கு எடுத்துக் கொள்ளப்படும் என கலெக்டர் ஜெயந்தி விடுத்துள்ள செய்திக்குறிப்பில் தெரிவித்துள்ளார்.

## 24ல் விவசாயிகள் குறைதீர் கூட்டம்

புதுக்கோட்டை, : விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 24ம் தேதி புதுகை கலெக்டர் அலுவலகத்தில் நடைபெற உள்ளது.புதுக்கோட்டை மாவட்ட விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம் வரும் 17ம் தேதி நடைபெறும் என அறிவிக்கப்பட்டு இருந்தது. ஆனால், இதற்கு பதிலாக இக்கூட்டம் வரும் 24ம் தேதி காலை 10 மணியளவில் புதுகை மாவட்ட கலெக்டர் அலுவலக கூட்ட அரங்கில் கலெக்டர் மனோகரன் தலைமையில் நடைபெற உள்ளது. இக்கூட்டத்தில் பல்வேறு அரசு அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் விவசாயம்

சம்பந்தப்பட்ட கோரிக்கைகளுக்கு பதில் அளிக்க உள்ளனர். எனவே மாவட்ட விவசாயிகள் இக்கூட்டத்தில் கலந்துகொண்டு பயன்பெறுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

**<u>கொள்ளிடம் பகுதியில் மழை மானாவாரி விவசாயிகள் மகிழ்ச்சி</u>**

கொள்ளிடம்,: கொள் ளிடம் பகுதியில் நேற்று மாலை பரவலாக மழை பெய்தது.நாகை மாவட்டம் கொள் ளிடம் பகுதியில் நேற்று மாலை பரவலாக மழை பெய்தது. கொள்ளிடம் கடைமடைப் பகுதிகளுக்கு பாசனம் அளிக்கும் புதுமண்ணியாறு, பொறைவாய்க்கால் உள்ளிட்டவற்றில் போதிய தண்ணீர் வராததால் நேரடி சம்பா விதைப்பு செய்த 20 ஆயிரம் ஏக்கர் நிலங்கள் காய்ந்து கிடந்தன. இதனால் விவசாயிகள் தண்ணீரின்றி தவித்து வந்தனர். மேட்டூர் அணை திறந்து 2 மாதங்கள் ஆகியும் இப்பகுதிக்கு தண்ணீர் இன் னும் வந்து சேரவில்லை.இந்நிலையில் நேற்று மாலை ஒரு மாதத்திற்கு பிறகு மழை பெய்ததால் சம்பா நேரடி விதைப்பு செய்த விவசாயிகள் மகிழ்ச்சியடைந்தனர். இந்தமழை சுமார் ஒருமணி நேரம் பெய் தது. இது குறித்து கொள் ளிடம் விவசாயிகள் சங்க கூட்டமைப்பு தலைவர் சிவபிரகாசம்பிள்ளை கூறுகை யில்; கொள்ளிடம் கடை மடை பகுதிக்கு, தண்ணீர் பாசனத்திற்கு கிடைப்பதற்கு அதிகாரிகள் இதுவரை போதிய அக்கறை செலுத்தவில்லை. இந்நிலையில் நேரடி விதைப்பு செய்த விவசாயிகளுக்கு, நேற்று பெய்த மழை பயன்தரும் வகையில் இருக்கிறது. இருந்தும் இந்தமழை போதாது. எனவே பயிர் களை காப்பாற்ற வாய்க்கால் பாசன தண்ணீர் கிடைக்க அதிகாரிகள் நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றார். அரசு கல்லூரியில் இலக்கிய மன்ற விழாவேதாரண்யம் : வேதாரண்யம் பாரதிதாசன் பல்கலைக்கழக மாதிரி கல்லூரி யில் உ.வே.சா இலக்கியமன்ற விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் ராஜசேகரன் தலைமை வகித்தார். கல்லூரி பேராசிரியர் மாதவன் வரவேற்றார். விழாவில் சிறப்பு விருந்தினராக பல்கலைக்கழக

தமிழ்துறை தலைவர் மதிவாணன் கலந்து கொண்டார். பல்கலைக்கழகத் தேர்வில் தரவரிசை பட்டியலில் 6 இடங்களைப் பெற்ற மாணவிகளுக்கு பரிசு வழங்கப்பட்டது. பேராசிரியர் மகேஸ்வரி நன்றி கூறினார்.

**மண் பரிசோதனை முகாம்**

ராஜபாளையம், : ராஜபாளையம் வட்டார வேளா ண்மை உதவி இயக்குனர் கிருஷ்ணமூர்த்தி விடுத்துள்ள அறிக்கை வருமாறு:ராஜபாளையம் வட்டாரத்திலுள்ள சேத்தூர், அயன் கொல்லங்கொண் டான், சோழபுரம் ஆகிய கிராமங்களில் வரும் 16, 17, 18 ஆகிய தினங்களில் நட மாடும் மண் பரிசோதனை வாகனம் மூலம் மண்பரிசோதனை முகாம்கள் நடக்கிறது. எனவே அந்தந்த பகுதியில் உள்ள விவசாயிகள் தங்கள் நிலத்தின் மண்ணின் சத்துக்கள் பற்றி அறிந்து கொள்ளவும், மண் பரிசோதனைக்குப்பின் அதற்கேற்றார்போல் உரமிட்டு அதிக மகசூல் பெறலாம். மண் பரிசோ தனை செய்ய விவசாயிகளுக்காக ரூ.20 செலுத்த வேண்டும். இவ்வாறு அறிக்கையில் கூறி உள்ளார்.

**விவசாயிகள் குறைதீர்க்கும் கூட்டம்**

விருதுநகர்,: விருதுநகர் கலெக்டர் ஹரிஹரன் விடுத்துள்ள செய்திக் குறிப்பில் கூறி இருப்பதாவது:- விருதுநகர் கலெக்டர் அலுவலகத்தில் அக்.17ம் தேதி காலை 11 மணிக்கு கலெக்டர் ஹரிஹரன் தலைமையில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் நடைபெறுகிறது. கூட்டத்தில் மாவட்டத்தில் உள்ள விவசாயிகள் கலந்து கொள்வதுடன், விவசாயம் தொடர்பான குறைகளை மனுவாக அளித்து பயன்பெறலாம். இவ்வாறு கூறப்பட்டுள்ளது.

**<u>சம்பா சாகுபடிக்கு 2,631 டன் உரம் திருச்சி வந்தது</u>**

திருச்சி, : மேட்டூர் அணையில் இருந்து காவிரியில் கடந்த மாதம் திறந்துவிடப்பட்ட நீரை பயன்படுத்தி டெல்டா மாவட்டங்களில் சம்பா சாகுபடி தீவிரமடைந்துள்ளது. இந்நிலை யில் கூட் டுறவு சொசைட்டிகளில் போதுமான உரங்கள் இருப்பு வைக்க உத்தரவிட்டுள்ளது. இதையொட்டி ஒடிசா மாநிலம், தாரோ பீட் டில் இருந்து சரக்கு ரயிலில் 42 வேகன்களில் 2,250 டன் காம்ப்ளக்ஸ் மற் றும் 381 டன் டிஏபி உர மூட்டைகள் திருச்சி குட்ஷெட்டுக்கு நேற்று வந்தது. உரமூட்டை கள் லாரிகள் மூலம் திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர் மாவட்டங்களில் உள்ள கூட்டுறவு சங்கங்களு க்கு அனுப்பி வைக்கப்பட்டது.

**இன்றைய வேளாண் செய்திகள்**

**<u>ஊராட்சி தோறும் விவசாயிகளை சந்திக்கும் புதிய திட்டம்</u>**

திண்டுக்கல், விவசாயத்திற்கு புத்துயிர் அளிக்க விவசாயிகளை, வேளாண்மை உதவி அலுவலர்கள் சந்திக்கும் புதிய திட்டத்திற்கு ஊராட்சி வாரியாக பணி ஒதுக்கப்பட்டு உள்ளது.

புதிய திட்டம்

தமிழ்நாடு அரசு உணவுப்பொருள் உற்பத்தியை பெருக்குவதற்காக புதிய திட்டங்களை அறிவித்து, வேளாண்மை துறைக்கு பல்வேறு சலுகைகளை வழங்கி வருகிறது. இந்த நிலையில் விவசாயத்தை மேம்படுத்தி புத்துயிர் ஊட்டும் வகையில் புதிய திட்டம் அறிமுகப்படுத்தப்பட இருக்கிறது. இந்த திட்டத்தில் மாதத்திற்கு 2 முறை விவசாயிகளை வேளாண்மை

துறையினர் சந்திக்க இருக்கின்றனர். இதற்காக ஒவ்வொரு வட்டாரத்திலும் பணியாற்றி வரும் வேளாண்மை உதவி அலுவலர்களுக்கு பணி ஒதுக்கப்படுகிறது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உதவி அலுவலர்களுக்கு பணி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. மாவட்டத்தில் 13 வட்டாரங்களிலும் தலா 1 உதவி இயக்குனர், 1 வேளாண்மை அலுவலர், 1 துணை அலுவலர், 5 வேளாண்மை உதவி அலுவலர்கள் உள்ளனர்.

ஊராட்சி வாரியாக பணி

இந்த ஒவ்வொரு வட்டாரத்திலும் 20 முதல் 24 ஊராட்சிகள் வரை உள்ளன. இந்த ஊராட்சிகளை 5 உதவி அலுவலர்களுக்கும் குறிப்பிட்ட அளவில் பிரித்து ஒதுக்கப்படுகிறது. பின்னர் ஒவ்வொரு உதவி அலுவலரும், தங்களுக்கு ஒதுக்கப்பட்ட ஊராட்சிகளை 8 பகுதிகளாக பிரிக்க வேண்டும். அவை சாகுபடி செய்யப்படும் பயிர் வகைகள், பாசன வகை உள்பட ஏதேனும் ஒரு வகையில் பிரித்து கொள்ள வேண்டும். அந்த 8 பகுதிகளிலும் திங்கள் முதல் வியாழக்கிழமை வரை வாரந்தோறும் ஒவ்வொரு நாளும் ஒரு பகுதிக்கு செல்ல வேண்டும். வெள்ளிக்கிழமை வழக்கமான அலுவலக வேலைகளை கவனிக்க வேண்டும். இதன் மூலம் 8 பகுதிகளுக்கும் 2 வாரத்திற்குள் சென்று விடலாம். அங்கு விவசாயிகளை சந்தித்து விவசாயம் குறித்து கலந்துரையாட வேண் டும். இதற்காக ஒவ்வொரு பகுதியிலும் குறிப்பிட்ட இடத்தை தேர்வு செய்து, தகவல் பலகை வைக்க வேண்டும்.

புத்துயிர் பெறும்

அதில் வேளாண்மை உதவி அலுவலரின் செல்போன் எண், பெயர், விவசாயிகளை சந்திக்க இருக்கும் தேதியை குறிப்பிட வேண்டும். மேலும் அந்த பகுதிகளை சேர்ந்த விவசாயிகளை சந்தித்து பயிர் சாகுபடி முறைகள், அரசு வழங்கும் மானியம் தொடர்பாக விளக்க வேண்டும்.

அதேபோல் அரசின் திட்டங்கள் அனைத்தும் விவசாயிகளுக்கு கிடைப்பதற்கு வேளாண்மை உதவி அலுவலர் நடவடிக்கை மேற்கொள்ள

வேண்டும். இதன் விளைவாக அரசின் மானியம், புதிய சாகுபடி தொழில்நுட்பம் போன்றவை விவசாயிகளுக்கு விரைவாக கிடைக்கும். இதனால் விவசாயம் புத்துயிர் பெறுவதோடு, உணவு தானிய உற்பத்தி பெருகும் வாய்ப்பு உள்ளது. இந்த திட்டம் விரைவில் செயல்பாட்டுக்கு வரும் என்று வேளாண்மை அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

## காஞ்சீபுரத்தில் விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் 17–ந்தேதி நடக்கிறது

காஞ்சீபுரம் காஞ்சீபுரம் மாவட்ட கலெக்டர் வி.கே.சண்முகம் வெளியிட்டு உள்ள ஒரு செய்திக்குறிப்பில் கூறி இருப்பதாவது:– காஞ்சீபுரம் மாவட்டத்தைச் சேர்ந்த வேளாண்மை பெருமக்களுக்கு விவசாயிகள் குறை தீர்க்கும் நாள் கூட்டம் வருகிற 17–ந்தேதி(வெள்ளிக்கிழமை) காலை 11 மணிக்கு மாவட்ட கலெக்டர் அலுவலக வளாகத்தில் உள்ள மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை கூட்ட அரங்கில் நடைபெற உள்ளது. கலெக்டர் வி.கே.சண்முகம் தலைமையில் நடைபெற உள்ள இந்த கூட்டத்தில் கலந்து கொள்ளும் விவசாயிகள், முக்கிய வேளாண்மைத்துறை மற்றும் சார்பு துறைகள் தொடர்பான கோரிக்கை மனுக்களை கூட்ட அரங்கில் அளிக்கலாம். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

## ஒடிசாவில் இருந்து 2,631 டன் உரமூட்டைகள் திருச்சி வந்தன

ஒடிசா மாநிலம் பாரதீப்பில் இருந்து விவசாய பயன்பாட்டுக்காக 2,631 டன் உரமூட்டைகள் சரக்கு ரெயிலில் நேற்று திருச்சி வந்தது. மொத்தம் 42 வேகன்களில் வந்த உர மூட்டைகளை குட்ஷெட் ரெயில்வே யார்டில் தொழிலாளர்கள் வேகன்களில் இருந்து கீழே இறக்கி லாரிகளில் ஏற்றி அனுப்பி வைத்தனர். இந்த உர மூட்டைகள் திருச்சி, பெரம்பலூர், அரியலூர், கரூர் ஆகிய மாவட்ட வேளாண்மை கூட்டுறவு சங்கங்களுக்கு

அனுப்பி வைக்கப்பட்டு, விவசாயிகளின் பயன்பாட்டுக்காக வினியோகிக்கப்பட உள்ளது.